### உத்திரமேரூர் ஒன்றியக் கழக முன்னாள் செயலாளர் –

# தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா.நாகன் மறைவு!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, பிப். 6- காஞ்சி தெற்கு மாவட்டம், உத்திரமேரூர் ஒன்றியக் கழக முன்னாள் செயலாளர் - தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா.நாகன் மறைவுக்கு தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:-

உத்திரமேரூர் முன்னாள் ஒன்றியக் கழகச் செயலாளரும் தலைமைச் செயற்குழு உறுப்பினருமான இரா. நாகன் அவர்கள் மறைந்த செய்தியறிந்து வேதனையுற்றேன்.

இரா.நாகன் அவர்கள் 1977 முதல் 2014 வரை தொடர்ந்து 6 முறை உத்திரமேரூர் ஒன்றியக் கழகச் செயலாளராகப் பணியாற்றிய சிறப்புக்குரியவர்ஆவார். உத்திரமேரூர் பேரூராட்சி மன்றத் தலைவராகவும் இருந்து மக்கள் பணியாற்றியுள்ளார்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்துகொண்டு 18 முறைக்கும் மேல் சிறை சென்ற பெருந்தொண்டராக விளங்கி, உத்திரமேரூர் பகுதியில் கழகம் வளர்த்த இரா.நாகன் அவர்களின் இழப்பு அப்பகுதியில் கழகத்துக்கு ஏற்பட்ட பேரிழப்பாகும்.

அவரை இழந்து வாடும் அவர்தம் குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் கழக உடன்பிறப்புகளுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.



பேரறிஞர் அண்ணா நினைவு தினத்தை முன்னிட்டு அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலில் நடைபெற்ற சமபந்தியில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி திருக்கோயில் தக்கார் ருக்மணி பழனிவேல்ராஜன் முன்னிலையில் பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கிய போது எடுத்தபடம். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் சங்கீதா, சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன், மதுரை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் பூமிநாதன் ஆகியோர் உடன் உள்ளனர்.

# தொழிலாளர்கள் பாதுகாப்பாக புலம்பெயர நாடுகள் உதவ வேண்டும்!

## ஐக்கிய நாடுகள் மன்றத்தில் விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்குமார் கோரிக்கை!

பேங்காங், பிப். 6- புலம்பெயர்வு குறித்த ஐக்கிய நாடுகள் மன்றத்தின் சர்வதேச ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவது குறித்து ஆசியா மற்றும் பசிபிக் நாடுகளின் கலந்தாய்வுக் கூட்டம் ஐக்கிய நாடுகள் மன்றத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தாய்லாந்து தலைநகர் பேங்காங்கில் பிப்ரவரி 3ஆம் தேதி முதல் 6ஆம் தேதி வரை ஐக்கிய நாடுகள் மன்ற அலுவலகத்தில் இந்த கூட்டம் நடைபெற்று வருகிறது. ஐக்கிய நாடுகள் மன்ற அழைப்பின் அடிப்படையில் விவசாயி கள் தொழிலாளர்கள் கட்சியின் தலைவரும், கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத் தலைவருமான பொன் குமார் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசினார்.



தொழிலாளர்கள் தரமான வேலை, நல்ல சம்பளம் என்ற நோக்கோடு பல்வேறு நாடுகளுக்கு ஆண்டாண்டு காலமாக வேலைக்கு புலம்பெயர்ந்து சென்று வருகின்றனர். அப்படி புலம்பெயரும் கட்டுமானத் தொழிலாளர் உள்ளிட்ட அமைப்புசாராத் தொழிலாளர்கள் முகவர்களால் ஏமாற்றப்பட்டு, அயல்நாடுகளுக்கு சென்றபின் சொல்லப்பட்ட வேலையோ, உறுதிகொளிக்கப்பட்ட சம்பளமோ கிடைக்காமல் பல்வேறு இன்னல்களுக்கு ஆளாக்கப்படுகின்றனர். அவருடைய பாஸ்போர்ட் மற்றும் ஆவணங்களை அந்த நாட்டு முதலாளி களால் பறிமுதல் செய்து கொள்வதால் விரும்பிய நேரத்தில் அவர்களால் தாயகம் திரும்ப முடி யாமல் அவதிப்படுகின்றனர். செய்த வேலைக்கு உரிய சம்பளத்தை முறையாக வழங்காமல் அந்த நாட்டு முதலாளிகளால் ஏமாற்றப்பட்டு தொழிலாளிகளின் சம்பளம் திருடப்படுகிறது. சுற்றுலா விசாவில் அனுப்பி வைக்கப்பட்டவர்களும், அந்த நாட்டின் சட்ட திட்டங்கள் அறியாத காரணத்தினாலும் பல தொழிலாளர்கள் சிறைப்பட வேண்டிய கொடுமைகள் நடைபெற்று வருகின்றன.

**தமிழ்நாடு அரசு அயலக தமிழர்களுக்கு பாதுகாப்பு!**

இப்படிப்பட்டத் தொழிலாளர்களை பாதுகாப்பதற்கு தமிழ்நாடு அரசு அயலகத் தமிழருக்கு என ஒரு தனித் துறையை உருவாக்கி இப்படி வெளி நாட்டில் உள்ள தமிழர்களை பாதுகாப்பதற்காக ஒரு வாரியத்தை அமைத்து பல்வேறு நலத்திட்டங்களை செய்து வருகிறது. குறிப்பாக, பாதிக்கப்பட்டத் தொழிலாளர்களுக்கு சட்ட உதவி வழங்குதல், இறந்து போனத் தொழிலாளர்களின் உடல்களை மீட்டுத் தருதல், பிள்ளைகளின் திருமணம் மற்றும் கல்விக்கு உதவுதல், இறந்துப் போனத் தொழிலாளியின் குடும்பத்திற்கு 10 லட்சம் ரூபாய் காப்பீட்டு தொகை வழங்குதல் போன்ற பல்வேறு உதவிகளை வழங்கி வருகிறது. இதே போல தொழிலாளர்களை அனுப்பும் நாடுகளும் தொழிலாளர்கள் வேலைக்கு செல்லும் நாடுகளும் இப்படி புலம்பெயர்ந்து செல்லும் தொழிலாளர்களைப் பாதுகாப்பதற்கு ஒரு ஏற்பாட்டை செய்திட வேண்டும். குறிப்பாக, தொழிலாளர்கள் அயல் நாடுகளுக்கு சென்று அந்த நாட்டின் வளர்ச்சிக்காக தன்னுடைய ரத்தத்தை வியர்வையாக சிந்தி உழைத்து அந்த நாட்டை மேம்படுத்துகின்றனர். எனவே அந்த நாட்டுக்கும் புலம்பெயர்ந்து செல்லும் தொழிலாளர்களை பாதுகாக்க வேண்டிய கடமை அந்த நாட்டுக்கு இருக்கிறது. அதுபோல வெளிநாடுகளில் வேலை செய்து தாய் நாட்டிற்கு அனுப்பும் பணம் அந்நிய செலாவணியாக தங்கள் நாட்டின் வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றுகிறது. இப்படி தொழிலாளர்களின் பணத்தை பெறுவதில் இந்தியா முதலிடத்தில் உள்ளது. கடந்த ஆண்டு மட்டும் 10 லட்சத்து 700 கோடி ரூபாய் அந்நிய செலாவணியாக இந்திய அரசு பெற்றுள்ளது. ஆனால் இந்திய அரசு இப்படிப்பட்ட வெளிநாடுகளில் பாதிக்கும் தொழிலாளர்களை பாதுகாப்பதற்கு உரிய நடவடிக்கை எடுத்திடவில்லை என்பது வருத்தமான செய்தி ஆகும்.

**தொழிலாளர்கள் பாதுகாக்கப்பட வேண்டும்!**

1983 ஆம் ஆண்டு புலம்பெயர் சட்டத்தை சப் ஏஜெண்டுகளையும் உள்ளடக்கியதாக அயல்நாடுகளில் உள்ளத் தொழிலாளர்களை பாதுகாப்பதாகவும், புதிய சட்டத்தை கொண்டு வர வேண்டும் என தொடர்ந்து வலியுறுத்தியும் இந்திய அரசு கண்டுகொள்ளவில்லை என்பது வேதனையான ஒன்று. தொழிலாளர்கள் செலவில்லாமல் அயல்நாடுகளுக்கு புலம்பெயர ஏற்பாடு செய்திட வேண்டும். அதற்கான கட்டணத்தை அந்த நாட்டு முதலாளிகள் செலுத்த வேண்டும். தொழிலாளர்களை ஏமாற்றும் ஏஜெண்டுகளை கடுமையாக தண்டித்திட வேண்டும். புலம்பெயரும் தொழிலாளர்கள் அந்த நாட்டின் சமூக நலத்திட்டங்களின் பயன்களை பெற்றிட வேண்டும். உள்நாடு மற்றும் வெளிநாடு தொழிலாளர்கள் என பாகுபாடு காட்டக் கூடாது. ஆண், பெண், மதம், மொழி, இனம், நிறம் என்ற எந்த வேறுபாடுகளையும் காட்டக்கூடாது. தொழிலாளர்கள் பாதுகாப்பாகவும், முறையாகவும் அயல்நாடுகளுக்கு புலம்பெயர்வதற்கான ஏற்பாடுகளை செய்து விட வேண்டும்.

பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் கடும் மழை, வெள்ளப்பெருக்கு, மண் சரிவு, கடல் நீர்மட்டம் உயர்வு, அளவு கடந்த வெப்பநிலை உயர்வு போன்றவற்றால் சாமானியத் தொழிலாளர்கள் பாதிக்கப்படுவதும் பிழைப்புக்காக புலம்பெயர்வதும் தற்போது அதிக அளவில் ஏற்பட்டு வருகிறது. இப்படிப்பட்டத் தொழிலாளர்களை பாதுகாப்பதற்கு அரசுகள் பொது நிதியை ஒதுக்கிட வேண்டும். எங்கள் தமிழ்நாட்டில் வெப்பநிலை உயர்வை ஒரு இயற்கை பேரிடராக தமிழ்நாடு அரசு அறிவித்து அதனால் கடும் வெப்பத்தால் பாதிக்கப்படும் தொழிலாளர்களுக்கு நிவாரண வழங்குவதற்கு ஏற்பாடு செய்துள்ளது. அதைப்போல அனைத்து நாடுகள் அரசும் பருவநிலை மாற்றத்தால் பாதிக்கப்படும் தொழிலாளர்களை பாதுகாக்க வேண்டும்.

**ஐக்கிய நாடுகள் முன்வர வேண்டும்!**

வெளிநாடுகளுக்கு வேலைக்கு சென்ற தொழிலாளர்கள் தங்கள் முதலாளியின் அனுமதியைப் பெற்று தான் தங்களினுடைய முதலாளியை மாற்றிக் கொள்ள முடியும் என்ற கப்பாலா முறையை முடிவுக்கு கொண்டு வர வேண்டும். புலம்பெயர்வோருக்கான ஐ.நா.வின் விதிகளை அனைத்து நாடுகளும் ஏற்றுக்கொண்டு, அங்கீகரித்து அதனை நடைமுறைப்படுத்த முன்வர வேண்டும். அதுபோல ஐக்கிய நாடுகள் சபையின் புலம்பெயர் வதற்கான சர்வதேச ஒப்பந்தத்தை இந்தியா உள்ளிட்ட அனைத்து நாடுகளும் நடைமுறைப்படுத்திட வேண்டும் என்பதை வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு தலைவர் பொன்குமார் உரையாற்றினார்.

ஐக்கிய நாடுகள் மன்றத்தின் சமூக பொருளாதார ஆணையத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த நிகழ்ச்சியில் புலம்பெயர்வோருக்காக பணியாற்றக்கூடிய தொழிற்சங்கங்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் ஆசியா, பசிபிக் சேர்ந்த அனைத்து நாடுகளின் அரசு அலுவலர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். ஆசியா மற்றும் பசிபிக் பகுதிகளில் இருந்து சுமார் 200 பேர் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். இந்தியாவின் சார்பில் வெளிநாடு விவகார துறையின் கூடுதல் செயலாளர் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

### மரபுகளுக்கு மாறாக; சட்டத்திற்குப் புறம்பாக செயல்படும்

# தமிழ்நாடு ஆளுநரின் செயல்களை வேடிக்கை பார்க்கிறது ஒன்றிய அரசு!

## மாநிலங்களவையில் – டாக்டர் கனிமொழி என்.வி.என். சோமு எம்.பி. கண்டனம்!

புதுடெல்லி, பிப். 6 - மாநிலங்களவையில் ஜனாதிபதி உரைக்கு நன்றி தெரிவிக்கும் விவாதத்தின் மீது தி.மு.க. எம்.பி. டாக்டர் கனிமொழி என்.வி.என். சோமு பேசியதாவது:

'இந்த நாட்டிலுள்ள 140 கோடி மக்களுக்கும் தொண்டு செய்வதே இந்த அரசின் தலையாயக் கடமை. அந்த நோக்கத்தின் பாதையிலேயே இந்த அரசு செயலாற்றி வருகிறது' என்று ஜனாதிபதி உரையின் மூலமாக இந்த அரசு சொல்கிறது.



ஆனால், அவர் அந்த உரையை வாசித்த அடுத்த நாளே வெளியான ஒன்றிய அரசின் பட்ஜெட்டில் சுமார் ஏழரை கோடி மக்கள் தொகை கொண்ட தமிழ்நாட்டை, அதன் நலனை முற்றிலுமாகப் புறக்கணித்துள்ளது இந்த அரசு. தமிழ்நாட்டை மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் தொடர்ந்து நடத்த முயல்கிறது இந்த அரசு.

கோவை மற்றும் மதுரையில் மெட்ரோ ரயில் திட்டங்கள், தாம்பரம் - செங்கல்பட்டு இடையிலான உயர்மட்ட நெடுஞ்சாலை போன்ற தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றும் திட்டங்களை முழுமையாகப் புறக்கணித்து ள்ளது இந்த அரசு.

**மாணவர்களின் படிப்பு பாதிப்பு!**

கடந்த ஓரிரு ஆண்டுகளில் மட்டும் மூன்று பெரும் புயல்களைச் சந்தித்து மிகப்பெரும் பொருளாதார மற்றும் நிதி இழப்புக்கு ஆளானது தமிழ்நாடு அரசு. இந்த நிலையிலிருந்து மீள 45 ஆயிரம் கோடி நிதி உதவி வேண்டும் என்று அவ்வப்போது கடிதம் வாயிலாகவும், நேரிலும் வேண்டுகோள் வைத்தும் இதுவரை ஒன்றிய அரசு கொடுத்த நிதி 276 கோடி ரூபாய் மட்டுமே. இதுதான் ஒட்டுமொத்த மக்களைக் காக்க நீங்கள் செயலாற்றும் விதமா?

ஒரே நாடு; ஒரே வரி என்ற உணர்வோடு, ஜிஎஸ்டி வரி விதிப்பு முறை அமலாக்கப்பட்டதால், நாட்டிலுள்ள எல்லா மாநிலங்களும் பயனடைந்துள்ளதாக இந்த அரசு சொல்கிறது. ஆனால் உண்மை என்ன..?

தமிழகத்திலிருந்து ஒரு ரூபாய் வரி செலுத்தப்படுகிறது என்றால், ஒன்றிய அரசின் வரிப்பகிர்வின் மூலம் தமிழ்நாட்டிற்கு கிடைக்கும் தொகை வெறும் 29 பைசா தான். ஆனால், அதே ஒரு ரூபாயைக் கொடுத்துவிட்டு 2.73 ரூபாயை வரிப்பகிர்வாகப் பெறுகிறது உத்தரப் பிரதேசம்.

இன்னொரு கோணத்தில் சொன்னால், 5.16 லட்சம் கோடி ரூபாய் வரியாகச் செலுத்திவிட்டு தமிழகம் திரும்பப் பெறுவது, 2.24 லட்சம் கோடி ரூபாய் மட்டுமே. அதாவது பாதி கூட திரும்பக் கிடைக்கவில்லை. ஆனால், 2.08 லட்சம் கோடி ரூபாயை மட்டுமே செலுத்தும் உத்தரப் பிரதேச மாநில அரசு, ஒன்றிய அரசிடம் இருந்து பெறும் வரிப்பகிர்வு, 9.04 லட்சம் கோடி ரூபாய், அதாவது நான்கு மடங்குக்கும் அதிகம்!

தேசிய அளவிலான ரயில்வே நிதி ஆதாரத்தில் வெறும் 2.5 சதவிகிதத்தை மட்டுமே தமிழ்நாடு போன்ற மாநிலத்திற்கு அளிக்கிறது ஒன்றிய அரசு. இது எந்த வகையில் நியாயம்?

வரி வசூலில் போதிய பங்களிப்பைச் செய்து, நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சியில் கணிசமான பங்கைச் செலுத்தும் தமிழ்நாடு அரசை, இன்னும் பல வகையிலும் வஞ்சிக்கிறது ஒன்றிய அரசு. ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வித் திட்டத்திற்காக தமிழ்நாட்டிற்கு ஒதுக்க வேண்டிய நிதியை நிறுத்தி வைத்துக் கொண்டு, பிஎம் ˙ரீ பள்ளிகளைத் திறக்க ஒப்புக்கொண்டு கையெழுத்திட்டால்தான் அந்த நிதியை விடுவிப்போம் என்று மிரட்டுகிறது ஒன்றிய அரசு. புதிய கல்விக்கொள்கையை இந்த அரசு அறிமுகம் செய்யும் முன்பே, இதிலுள்ள பல விஷயங்களை பல ஆண்டுகளாக செயல்படுத்தி வருகிறது தமிழ்நாடு அரசு.

பொதுப்பட்டியலில் உள்ள கல்வி தொடர்பான ஒரு விசயத்தில் இப்படி ஒருதலைபட்சமாக நடந்து கொண்டு ஒரு மாநில அரசை மிரட்டுவது, அரசமைப்புச் சட்டத்தில் சொல்லப்பட்டுள்ள சுயாட்சி அதிகாரத்தையும், கூட்டாட்சித் தத்துவத்தையும் சிதைப்ப தாகும். அரசமைப்புச் சட்டத்தின் 75 வது ஆண்டு விழாவைக் கொண்டாடும் இந்த நேரத்தில் இந்த அரசு இப்படி நடந்து கொள்வதுதான் வேதனையானது. இதனால் மாணவர்களின் படிப்பு பாதிக்கிறது என்பதைக் கூட உணர மறுக்கிறது இந்த அரசு.

இதற்கு நேர் மாறாக, எங்களது தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்கள், 'மாணவச் செல்வங்கள் படிப்பதற்கு சமூகமோ, பொருளாதாரமோ, அரசியல் சூழ்நிலையோ எதுவும் தடையாக இருக்கக் கூடாது' என்ற கொள்கைப்படி திராவிட மாடல் ஆட்சியை நடத்தி வருகிறார்.

**சொற்ப தொகையை ஒன்றிய அரசு ஒதுக்குகிறது!**

அனைவருக்கும் வீடு என்ற திட்டத்தில் ஒரு சொற்பத் தொகையை ஒன்றிய அரசு ஒதுக்குகிறது. அதற்கு பிரதமரின் வீடுகட்டும் திட்டம் என்று பெயர் வைக்கிறது. உதாரணத்திற்கு நர்ப்புறத்தில் வீட்டு வசதியை ஏற்படுத்திம் பிரதமரின் பெயரிலான திட்டத்திற்கு ஒரு வீட்டிற்கு ஒன்றிய அரசு தரும் தொகை 1.5 லட்சம் ஆனால் மாநில அரசு ஒதுக்க வேண்டிய தொகையோ 12 முதல் 14 லட்சம் வரை. உண்மையைச் சொன்னால், இந்தத் திட்டத்திற்கு முதலமைச்சரின் வீட்டுவசதித் திட்டம் என்று பெயர் வைத்திருக்க வேண்டும்.

இன்னும் இரண்டு விஷயங்களை இந்த அவையின் கவனத்திற்கு கொண்டுவருகிறேன். மக்களவையில் சபாநாயகரின் இருக்கைக்கு அருகே இந்த அரசு செங்கோலை வைத்தது. ஜனாதிபதி தனது உரையை நிகழ்த்துவதற்காக மக்களவைக்கு வந்தபோது அவரை வரவேற்க அந்த செங்கோலை எடுத்துச்சென்று வாசலில் இருந்து அவரை வரவேற்று அழைத்துவந்து அமர வைத்துவிட்டு, மீண்டும் அந்த செங்கோலை அங்கே வைத்தார்கள். இது புது மரபாக இருக்கிறது.

ஆனாலும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த அரசு ஒரு மரபைக் கொண்டு வந்து அமல்படுத்தினால் அதிலுள்ள உணர்வைப் புரிந்துகொண்டு நடந்து கொள்கிறார் நமது ஜனாதிபதி.

ஆனால், இதே போன்றுதான் பல பத்தாண்டுகளாக தமிழ்நாடு சட்டமன்றத்தில், ஆளுநர் உரையின் போது தொடக்கத்தில் தமிழ்த்தாய் வாழ்த்தும், முடிவில் தேசிய கீதம் பாடுவதும் வழக்கத்தில் உள்ள மரபாக இருக்கிறது. ஆனால், இந்த ஒன்றிய அரசால் நியமிக்கப்பட்டு, அங்கு நியமனப் பதவியில் உள்ள ஆளுநர் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசு தொடர்ந்து அமல்படுத்த நினைக்கும் இந்த மரபை ஏற்க மறுத்து, புதிய விஷயத்தை புகுத்த நினைக்கிறார், அதை இந்த அரசும் வேடிக்கை பார்க்கிறது. இது கண்டனத்திற்குரியது.

இப்படிப்பட அத்துமீறல்களை, சட்டத்திற்கும் மரபுக்கும் மாறான விஷயங்களை தொடர்ந்து செய்வ தால் தான் தமிழ்நாட்டின் ஆளுநராக உள்ள ஆர்.என் ரவியைத் திரும்பப்பெறும் படி சொல்கிறோம். இல்லாவிட்டால், இதற்கு ஒரு தீர்வாக, ஆளுநர்களுக்கென்று ஒரு செயல்முறையை, அதிகார வரம்பை நிர்ணயிக்க வேண்டும். இன்னும் சொல்லப்போனால், இது போன்ற விவகாரங்களுக்கான நிரந்தரத் தீர்வுக்ககாக ஆளுநர் பதவியையே நீக்கவும் வலியுறுத்தி வருகிறது தி.மு.கழகம்.

அதே போல, கச்சத்தீவை இவங்கைக்கு தாரைவார்த்தது தி.மு.க.தான் என்று பல நேரங்களில் இந்த அவையிலும், வெளியிலும் எங்கள் இயக்கமான தி.மு.க. மீது உண்மைக்கு மாறான ஒரு குற்றச்சாட்டு வைக்கப்படுகிறது. அது உண்மையல்ல. அரசமைப்புச் சட்டத்தின் உரிய பிரிவுகளைத் திருத்தாமல், இப்படி நமது நாட்டிற்கு உரிமையான ஓர் இடத்தை இன்னொரு நாட்டிற்கு தாரை வார்ப்பது சரியல்ல என்று தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் இதே அவையில் தங்கள் எதிர்ப்பை பதிவு செய்திருக்கின்றன என்று சில நாட்களுக்கு முன்னதாக இந்த அவையில் எங்கள் குழுத் தலைவர் திருச்சி சிவா அவர்கள் சொன்னதை அவையின் முன்னவர் அமைச்சர் ஜே.பி. நட்டாவும் அதை ஒப்புக்கொண்டார்.

அதுமட்டுமல்ல, தமிழ்நாட்டுக்குச் சொந்தமான கச்சத்தீவை இலங்கைக்கு தாரை வார்ப்பதை ஏற்க முடியாது என்று சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றிய இயக்கம் தி.மு.க. என்பதையும் இங்கே யாரும் மறுக்க முடியாது என்பதை இந்த அவையில் அழுத்தமாகப் பதிவு செய்கிறேன்.

**தமிழ்நாட்டிலிருந்து ஒன்றிய அரசுக்கு கிடைக்கும் அபரிமிதமான வருவாய்!**

பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், தளபதி மு.க. ஸ்டாலின் ஆகிய முப்பெரும் தலைவர்களின் சீரிய வழிகாட்டுதலில், திராவிட மாடல் ஆட்சியின் பயனாக தமிழ்நாட்டிலிருந்து ஒன்றிய அரசுக்கு கிடைக்கும் அபரிமிதமான வருவாய் எல்லாம் வட மாநிலங்கள் எடுத்துக் கொண்ட போதும், வடக்கிலிருந்து உழைத்துப் பிழைக்க வழி தேடி வருவோரெல்லாம் வாழ்வாங்கு வாழ, வந்தாரை வாழ வைக்கும் பூமியாம் எங்கள் தமிழ் நாடு இன்று திராவிட மாடல் ஆட்சி செய்த வளர்ச்சி காரணமாக வருவாய் ஈட்டுவதில் முன்னணி மாநிலமாக தமிழ்நாடு உள்ளது வியப்பேதும் இல்லை.

உணமி இவ்வாறு இருக்க, இந்த நாட்டின் சுமார் 25 கோடி பேர் ஏழ்மையிலிருந்து விடுபட்டிருப்பதாக ஜனாதிபதி உரையின் மூலமாக இந்த அரசு சொல்லியிருப்பதுதான் மிகப் பெரிய நகைச்சுவை!

இவ்வாறு டாக்டர் கனிமொழி என்.வி.என். சோமு பேசினார்.

### ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டை வஞ்சிக்கும் மோடி அரசைக் கண்டித்து

# கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாபெரும் கண்டன பொதுக்கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - மேயர் ரெ. மகேஷ் அறிக்கை!

குமரி, பிப். 6- ஒன்றிய அரசின் ஓரவஞ்சனையான நிதிப் பகிர்வு, தமிழ்நாட்டின் முக்கியத் திட்டங்கள் புறக்கணிப்பு, மாண்புமிகு. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தொடர்ச்சியான கோரிக்கைகளுக்குப் பிறகும் எஸ்.எஸ்.ஏ. பேரிடர் மேலாண்மை ஆகியவற்றுக்கு நிதி ஒதுக்காதது, ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாடு என்ற பெயரைக் கூட உச்சரிக்காதது என, தொடர்ந்து தமிழ்நாட்டை வஞ்சிக்கும் மோடி அரசைக் கண்டித்து கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாபெரும் கண்டன பொதுக்கூட்டம் (08.02.2025 - சனிக்கிழமை) அன்று மாலை 5.00 மணிக்கு கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் தலைமையில் நாகர்கோவில், வடசேரி, அண்ணா விளையாட்டு அரங்கம் அருகில் வைத்து நடைபெறவுள்ளது.



சிறப்புவிருந்தினர்களாக பாராளுமன்ற உறுப்பினர் எம்.சண்முகம் மற்றும் தலைமைக் கழக பேச்சாளர் ஆலங்குளம் மரியராஜ் கலந்துகொண்டு சிறப்புரையாற்ற உள்ளார்கள்.

ஆகவே இந்த மாபெரும் கண்டன பொதுக்கூட்டத்தில் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி கழக செயலாளர்கள், நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பேரூர், வட்ட, கிளை கழக செயலாளர்கள், நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழக அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக செயல்வீரர்கள், கழக முன்னோடிகள் மற்றும் கழக உடன்பிறப்புகள், பொதுமக்கள் உள்ளிட்ட அனைவரும் பெருந்திரளாக பங்கேற்று சிறப்பிக்க வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.



கழகத் தலைவர் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, மாநில மாணவரணி செயலாளர் சி.வி.எம்.பி. எழிலரசன் அறிவுறுத்தலின்படி ஒன்றிய அரசின் யு.ஜி.சி 2025 வரைவு நெறிமுறையை திரும்பப் பெற வலியுறுத்தி மதுரை காமராஜர் பல்கலைக்கழக வளாகத்தில் மதுரை தெற்கு மாவட்ட திமுக மாணவரணி சார்பாக மாவட்ட அமைப்பாளர் பாண்டிமுருகன் முன்னிலையில் தெற்கு மாவட்ட செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் மாணவர்களிடையே துண்டு பிரசுரங்களை வழங்கினார். உடன் மாணவர் அணி மற்றும் கழக நிர்வாகிகள் பெரியசாமி, முத்துராமன், மதன்குமார், வருசை முகமது, முல்லை மூவேந்திரன், மருது பாண்டியன், ஜெய்லானி, செந்தமிழ் அரசி, முத்தரசன், பிரம்மன், அருண் பிரசாத், விஷ்ணு குரு, விஜய சிம்மன் ஆதவன் அதியமான், காளிதாஸ், இந்திரா ஜெயக்குமார், சிவபாண்டி, அஜய் சூர்யா, முத்துராமலிங்க சேதுபதி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.